அதை தங்கள் தங்கள் மாநிலத்தில் தொடங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதே போன்று நாமும் மத்திய அரசைக் கேட்டுக்கொண்டு வருகிறோம்.

திரு. வை. சுவாமிநாதன்: ஆஸ்திரேலியக் கம்பெனி ஒன்று ஆண்டிற்கு 12,000 கார்களைத் தயாரித்துக் கொடுப்பதாக அறிவித்திருக்கிறது. அந்தத் தொழிற்சாலையை நம்முடைய மாநிலத்தில் ஆரம்பிப்பதற்கு மத்திய அரசாங்கத்துடன் பேசி நான்காவது திட்டத்தில் சேர்த்துக் கொள்ள வழி செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அப்படிப்பட்ட ஒரு தகவல் மத்திய அமைச்சரவைக்குத் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும், அதைப்பற்றி மத்திய அரசு விரிவான விளக்கங்களைக் கேட்டிருப்பதாகவும் காலைப் பத்திரிகையில் பார்த்தேன்.

திரு. மு. ச. சிவசாமி: நம்முடைய மாநில அரசு கேட்டுக் கொண்டிருக்கும் சிறிய கார் தொழிற்சாலைக்கு மத்திய அரசு அனுமதி கொடுத்தால் அந்தத் தொழிற்சாலையை, வளரும் நகரமாகிய தூத்துக்குடியில் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அங்கத்தினர் அவர்களுடைய ஆசை வரவேற்கத்தக்கது.

திரு. ஆர். நாகசுந்தரம்: சிறிய கார் தொழிற்சாலையைப் பற்றி டெல்லியிலும், இங்கும் அடிக்கடி பேசப்படுகிறது. இதற்கு லைசென்ஸ் வழங்கும் அதிகாரம் மாநில அரசுக்கு இருக்கிறதா அல்லது மத்திய அரசுக்கு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: லைசென்ஸ் மத்திய அரசுதான் வழங்க வேண்டும். சிறிய கார் உற்பத்தியைப்பொறுத்து பல பிரச்சினைகள் எழுப்பப்படுகின்ற காரணத்தால் மத்திய அரசு பல ஆண்டு காலமாக கருத்து வேறுபாடுகளுக்கு உட்பட்டு முடிவு எடுக்க முடியாத நிலையில் இருக்கிறது.

திரு. டி. மார்டின்: தமிழ்நாட்டில் உள்ள சிறந்த விஞ்ஞானி திரு. ஜி. டி. நாயுடு அவர்கள் 5,000 ரூபாய் செலவில் சிறிய காரை உற்பத்தி செய்ய முடியும் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் இந்த அரசுக்கு ஏதேனும் மனுச் செய்துள்ளார்களா? அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கருத்து தெரிவித்திருப்பதைப் பற்றித் தகவல் இல்லை. இந்த அரசாங்கத்திற்கு அதைப் பற்றிய திட்டம் அனுப்பப்பட்டால் நிச்சயம் பரிசீலிக்கப்படும்.

மேலூர் வட்டம் பெரியருவி நீர்த்தேக்கம்

*64 வினா.—**திரு. பெ. மலைச்சாமி**: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் வட்டத்தில் அமைக்கப்பெற்ற பெரியருவி நீர்த் தேக்கம் பாசனத்திற்குப் பயன்படுகிறதா ?

(இ) இல்லையெனில், காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. பெ. மலைச்சாமி : இந்த நீர்த்தேக்கத்தால் எத்தனை கிராமங்களில் உள்ள எத்தனை ஏக்கர் நிலப்பரப்புகள் பயன்பெறுகின்றன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அந்தத் தகவல் இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

காவேரி ஆற்றின் குறுக்கே பாலம்

*65 வினா.—திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

காவேரி ஆற்றின் குறுக்கே குளித்தலைக்கும்—முசிரிக்கும் இடையில் பாலம் கட்டும் உத்தேசம் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்; அத்தகைய செயற்குறிப்பு ஒன்று அரசாங்கத்தின் ஆலோசனையில் இருந்து வருகிறது.

திரு. வை. சுவாமிநாதன் : இந்தத் திட்டத்திற்கான எஸ்டிமேட் தொகை எவ்வளவு? எந்த ஆண்டில் இருந்து வேலை தொடங்கும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இதற்கு 55 லட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. மாநில ரீதியில் இவ்வேலையை எடுத்துக் கொள்ள இயலாது. இந்த வேலையைத் தொடங்குவது இந்திய அரசிடம் இருந்து இவ் வேலைக்குக் கிடைக்கும் உதவியைப் பொறுத்திருக்கிறது.

Madras Zoo

*66 *Q*.—Thiru K. VINAYAGAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :

(*a*) Whether the animals in the Madras Zoo are ill-fed and ill kept;

(*b*) Whether there is rubbish all over the place in the Zoo; and

(*c*) Whether the gate collections go to the Corporation authorities or to any contractor?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை.

(ஆ) இல்லை; மிருகக் காட்சிசாலை ஊழியர்கள் அந்த இடத்தை நாள் தவறாமல் துப்புரவாக வைத்து வருகின்றனர்.

(இ) மிருகக் காட்சிசாலைப் பூங்காவைக் காண வருபவர் களிடம் நுழைவுக் கட்டணத்தையும், சைக்கிள் நிறுத்துமிடத்துக் கான கட்டணத்தையும் வசூலிக்கும் உரிமை ஆண்டுதோறும் ஒப்பந்தக் குத்தகைக்கு விடப்படுகிறது.